<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,</u>
<u>இலுப்பூர்</u>

**முன்னிலை: திருமதி. சாதத்துணிஷா, பி.ஏ. பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

2025ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31ம் நாள் வெள்ளிக் கிழமை

**<u>புதிய இடை நிலை மனு எண். 3/2025</u>**

**<u>in</u>**

புதிய இடை நிலை மனு எண். 2/2025

in

**<u>அசல் வழக்கு எண்.10/2025</u>**

1.மணி
2.சுப்பையா ..... மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

... எதிர் ...

1.ராமன் (எ) ராமைய்யா

2.மணி

..... எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது என் முன்பாக 23.10.2025–ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.ராம்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.பழ,அழகர் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை மற்றும் எதிர்உரையை ஏற்றுக்கொண்டும், அசல் வழக்கில் 10/2025 என்ற எண்ணில் IA.No 02/2025 என்ற மனுவில் கடந்த 28.04.2025ம் தேதியன்று மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளைப் பொறுத்து ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை ரத்துச்செய்தும், மேற்படியாளர்களுடைய வாதத்தை

நிரூபிக்க மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்து உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 உ/சே பிரிவு 151ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

வாதிகளால் தங்களுக்கு எதிராக நிரந்தர தடையாணை பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்கள் கோரி நீதிமன்றத்தில் O.S.No:10/2025 என்ற அசல் வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர் என்றும், அதனைத் தொடர்ந்து என்ற இடைக்கால தடையாணை பரிகாரம் கோரி I.A.No:2/2025 மனுவையும் தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேற்படி வழக்கில் I.A.No:2/2025 என்ற மனுவில் எதிர்உரை தாக்கல் செய்ய கடந்த 28.04.2025 ஆம் தேதியன்று வாய்தா ஏற்பட்டிருந்தது என்றும், தாங்களும் மேற்படி வழக்கைப் பொறுத்து வாய்தா தேதியான கடந்த 28.04.2025 ஆம் தேதி நேரில் ஆஜராக இருந்தநிலையில், தங்களது நெருங்கிய உறவினர் திடீரென இறந்துவிட்டபடியால், அங்கு தாங்கள் செல்ல வேண்டிய அவசியமான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது என்றும், அதனால் மேற்படி வழக்கு வாய்தா தேதியில் தாங்கள் மேற்படி துக்க நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சென்றுவிட்டபடியால், தங்களால் மேற்படி வாய்தா தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், அதனைத் தொடர்ந்து மறுநாள் திடீரென்று தனக்கு வாந்தி, குளிர்காய்ச்சல், மயக்கம் ஏற்பட்டு கீழே விழுந்துவிட்டேன் என்றும், உடன் வீட்டில் இருந்தவர்கள் தன்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பரிசோதனை செய்ததில் தனக்கு டெங்கு காய்ச்சல் இருப்பது தெரியவந்தது என்றும், மேற்படி டெங்கு காய்ச்சலினால் தனது உடல்நிலை பெரிதும் பாதிக்கப்பட்டு நடமாட இயலாமல் ஆங்கில மருந்தான அலோபதி சிகிச்சை பெற்றும் பலனில்லாததினால் தானும், தனக்கு ஏற்பட்ட டெங்கு காய்ச்சலுக்குரிய நாட்டு மருந்தான சின்ன வெங்காயத்துடன் வெல்லம் சேர்த்து சாப்பிட்டுக் கொண்டு இரவு நேரத்தில் தனது உடல்முழுவதும் தேங்காய் எண்ணெய் தேய்த்தும் மற்றும் கேரட்டுடன் வெள்ளரிப்பழம் ஜூஸ் போட்டு சாப்பிட்டும், ஆரஞ்சு ஜூஸ் சாப்பிட்டும் மற்றும் நிலவேம்பு, மலவேம்பு கசாயம் சாப்பிட்டும் மற்றும் கொய்யா இலையை கொதிக்க வைத்து, இலையுடன் பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிட்டுக் கொண்டு வந்ததால் நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றுவந்தேன் என்றும்,

பின்னிட்டு இன்றையதினம் உடல்நலம் சற்று குணமடைந்தவுடன் மேற்படி தங்களது வழக்கறிஞரிடம் தாங்கள் மேற்படி வழக்கு வாய்தா தேதியில் ஆஜராகாத சூழ்நிலையை எடுத்துரைத்து வழக்கு பற்றிய விபரம் கேட்டபொழுது கடந்த 28.04.2025 –ஆம் தேதியன்று தங்களின் ஆஜரின்மை காரணமாகவும், எதிர்உரை தாக்கல் செய்யாத காரணத்தாலும் அசல் வழக்கில் மேற்படி I.A.No:2/2025 மனுவில் தங்களைப் பொறுத்து ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் எடுத்துரைத்தார் என்றும், தங்களின் வழக்குரைஞரின் அறிவுறுத்தலின்பேரில் தாங்கள் இந்த செட்டசைடு மனுவை நீதிமன்றத்தில் பணிந்து தாக்கல் செய்கிறோம் என்றும், மேற்படி வாய்தா தேதியில் தங்களுடைய ஆஜரின்மை வேண்டுமென்றோ, கவனக்குறைவினாலோ ஏற்பட்டதல்ல என்றும், எனவே, மேற்படி வழக்கில் தங்களது ஆஜரின்மை காரணமாகவும், எதிர்உரை தாக்கல் செய்யாத காரணத்தாலும் I.A.No:2/2025 மனுவில் கடந்த 28.04.2025 ஆம் தேதி எங்களுக்கெதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்துச் செய்யக் கோரியும், இத்துடன் தங்கள் தரப்பு எதிர்வழக்குரை மற்றும் என்ற எதிர்உரையைத் தாக்கல் செய்கிறோம் என்றும், இம்மனுவை அனுமதிக்காதபட்சத்தில் தங்களுக்கு ஈடுசெய்ய இயலாத இழப்பும், இன்னலும் ஏற்பட்டுவிடும், என்றும், எனவே இத்துடன் தாக்கல் செய்யும் தங்களது தரப்பு எதிர்வழக்குரை மற்றும் எதிர்உரையை ஏற்றுக்கொண்டும்,மேற்கூறிய காரணங்களுக்காக O.S. No 10/2025 என்ற வழக்கில் I.A.No:2/2025 என்ற மனுவில் கடந்த 28.04.2025 ஆம் தேதியன்று தங்களைப் பொறுத்து ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை ரத்துச் செய்தும், தங்களுடைய வாதத்தை நிரூபிக்க தங்களுக்கு சந்தர்ப்பம் அளித்தும், மேலும் நீதிமன்றம் தகுந்ததெனக் கருதும் வேறு எந்த ஆணைகளையும் பிறப்பித்தும் தக்க உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. 1, 2எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரை:</u>**

மனுதாரரின் மனு பொய்யும், பிரட்டும் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பானதாகும் என்றும், ஆதன் அடிப்படையில் எதிர் மனுதாரரின் மனு எடுப்பிலேலே தள்ளுபடி செய்வதற்கு அருகரை உடையதாகும் என்றும், மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில சங்கதிகளை தவிர மற்றவற்றை இந்த

மனுதாரர் பொய்யெ மறுக்கின்றபடியால் அவற்றை எதிர்மனுதாரரே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர் ஆவார் என்றும், மனுதாரர் மனுவில் சொல்லியுள்ளதை போல் அசல் வழக்கில் கடந்த 28.04.2025–ம் தேதியன்று மனுதாரர் எதிர்உரை தாக்கல் செய்யாததால் வழக்கு முடித்துவைக்கப்பட்டது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாததும் அப்பட்டான பொய்யும் மனுவின் தோதிற்கானதுமாகும் என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர் கடந்த 28.04.2025–ம் தேதி மேற்படி நீதிமன்றத்தில் வாய்தா ஏற்பட்டும் அன்றைய தேதியிருந்து 30.06.2025–ம் தேதி இருந்த நிலையில் மனுதாரருக்கம் கடும் வயிற்றுவலி ஏற்பட்டதாகவும், மனுதாரர்/பிரதிவாதியின் நெருங்கிய உறவினர் இறப்பு ஏற்பட்டு இருநதாமையால் ஆஜராக வில்லை என்றும், மனுதாரர்/பிரதிவாதி கூறியுள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு புரம்பாணவைகள் ஆகும் என்றும், 60 கழித்து தான் நீதிமன்றத்தில் மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், காலதாமதமாக மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்திருக்கும் மனுவில் இருந்து அதன் அடிப்படையில் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்வதற்கு அருகதையுடைதாகும் என்றும், உண்மை நடப்பு என்னவென்றால் உறவினர் இறப்புக்கு சென்றதாக சொல்வது முற்றிலும் பொய்யாகும் என்றும், ஏன்னெற்றால் உண்மையில் இறந்துவிட்டார் என்றால் அவர் எந்த ஊர் என்றும் இறந்தவர் பெயர் குறிப்பிட்டு சொல்லியிருப்பார் ஆனால் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றும், மேலும் தனக்கு கடுமையான வயிற்று வலி ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிட்டு உள்ளார் என்றும், உண்மையில் வயிற்று வலி ஏற்பட்டு இருந்தால் எந்த ஊர் எந்த மருத்துவனையில் சிகிச்சை பார்த்தார் என்று குறிப்பிட்டு சொல்லிருப்பார் என்றும், ஆனால் அவர் குறிப்பிட்டு சொல்லவில்லை மற்றும் மருத்துவனை ஆதாரங்கள் ஏதுவும் மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரரை அளக்கலிக்க வேண்டும் என்ற நோக்கில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுதாரரின் மனு தள்ளுபடி செய்வதற்கு அருகதையுடையதாகும் என்றும், மனுதாரர் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அனுகவில்லை அதன் அடிப்படையிலும் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்வதற்கு அருகதையுடையதாகும் என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரட்டான மனுவை இந்த எதிர்மனுதாரரின்/வாதிக்கு அதிகபட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டி

எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

**3. பிரச்சனைக்கான தீர்வு**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இந்த மனுவும் கடந்த 28.04.2025ம் தேதியன்று IA No 02/25ல் தங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை நீக்கல் செய்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை அனுமதிக்க ஆட்சேபணை தெரிவித்துள்ள போதிலும், எதிர்மனுதாரர் தரப்பில் இந்த மனுவுடன் எதிருரை தாக்கல் செய்துள்ளதை பார்க்கும் போதும் மற்றும் மனுவில் கூறியுள்ள காரணங்களை கருத்தில் கொண்டும், மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் விதமாக இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இவ்வழக்கில் ஏற்பட்டுள்ள கால விரையத்தை ஈடு கட்டும் வகையில் எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் இந்த மனுவினை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக மனுதாரர்கள்/பிரதிவாதிகள் செலவு தொகையாக ரூ.300/- எதிர்மனுதாரர்/வாதிக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 17.11.2025.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2025ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ம் நாள் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.10.31 15:31:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.10.31 15:31:31 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.